DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | | | |
|---|---|---|---|
| Name | சுப்பிரமணி | Village | வாணியம்பாடி |
| Father's Name | பொன்னுசாமி | Taluk | வாணியம்பாடி |
| Age | 68 | Calling | தட்டச்சர் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **10.03.2026**

**E.A. No.18/2019 in EP.No.2/2018** **வா.சா.2** **01.02 PM – 01.15 PM**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி – (1ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

1. 1974ல் ஆவணம் ஏற்படுத்தியபோது அது குறித்து வில்லங்கம் ஏதாவது இருக்கிறதா என நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. 1887/1972 எண்கொண்ட பத்திரம் எதுவும் நான் பார்க்கவில்லை என்றால் நான்பார்த்தேன். இன்றைய தேதி வரையில் மேற்படி என் கொண்ட பத்திரமே இல்லை என்றாலும் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1887/1972 என் கொண்ட பத்திரமானது யார் யா ர் பெயருக்கு எழுதப்பட்டது என்று சொன்னால் சாரதம்மாள் என்பவர் தன்னுடைய பேர குழந்தைகளுக்கு எழுதி வைத்த பத்திரமாகும். மேற்படி பேரக்குழந்தைகளை பெயர் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. எந்த தேதியில் எழுதப்பட்டு எந்த தேதியில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சாட்சி ஒரே தேதியில் எழுதப்பட்டு ஒரே தேதியில் பதிவு செய்யப்பட்டது என கூறுகிறார்.

2. அந்த ஆவணம் 1887/1972 உயில் ஆவணம் என சாட்சி கூறுகிறார். மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண் மற்றும் விஸ்தீரணம் என்னவென்றால் எனக்குத் தெரியாது ஞாபகம் இல்லை. 1887/1972 தேதியில் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் உயிலே இல்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உயில் ஆவணம் எழுதப்பட்டதாக கூறும் தேதியில் நான் பதிவு செய்யப்பட்ட எழுத்தர் இல்லை என்று சொன்னால் சரிதான் அந்த ஆவணம் எழுத உரிமம் தேவையில்லை.

3. அப்படி என்றால் எந்தவித பயிற்சியும் சான்றிதழும் இல்லாமல் தான் அந்த ஆவணத்தை நான் ஏற்படுத்தினேன் என்று சொன்னால் சரிதான். வரிபிளப்பு ஏதேனும் இருப்பின் முழு கையொப்பம் கையொப்பம் பத்திர எழுத்தர் செய்ய வேண்டும் என்று சொன்னால் சரிதான். ம.சா.ஆ.1 ஆவணத்தில் முதல் பக்கத்திலும் இரண்டாம் பக்கத்திலும் அவ்வாறு திருத்தங்கள் மேற்கொண்டதற்கு பத்திர எழுத்தர் என்ற முறையில் எந்த ஒரு கையொப்பமும் இடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அவ்வாறு ஆவணம் எழுதி முடித்த பிறகு இறுதியில் திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் அதை குறிப்பிட வேண்டும் என்று சொன்னால் சரிதான். அவ்வாறான எந்தவித குறிப்பு மேற்படி ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான்.

4. ம.சா.ஆ.1 ஆவணத்தில் 2ம் பக்கத்தில் 2வது வரியில் வேறு பேனாவின் மூலம் மைனர் என தொடங்கும் வரி இடை சருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 உயில் ஆவணமானது சாரதம்மாள் எழுதவும் இல்லை அதில் இருக்கும் கையெழுத்து அவருடைய இல்லை என்று சொன்னால் சரியல்ல.

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.